## Winmeen Tnpsc Daily Free Test 2 in Tamil

## 6th Social Science Lesson 2 Questions

### 2. மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

1. வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றி படிப்பது ________ ஆகும்.

A) கல்வெட்டியல

B) மானுடவியல்

C) தொல்லியல்

D) அகழ்வாராய்ச்சியியல்

2. மானுடவியலாளர்களால் கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள தான்சானியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதக் காலடித்தடங்கள் எத்தனை ஆண்டுகள் பழமையானவை?

A) 2.5 மில்லியன்

B) 2.5 பில்லியன்

C) 3.5 மில்லியன்

D) 3.5 பில்லியன்

3. மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றியும் படிப்பது

A) கல்வெட்டியல்

B) மானுடவியல்

C) தொல்லியல்

D) அகழ்வாராய்ச்சியியல்

4. மானுடவியல் (anthropology) என்னும் சொல் _____மொழி வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.

A) ஆங்கிலம்

B) இலத்தின்

C) கிரேக்கம்

D) பிரெஞ்சு

5. பிரான்சில் உள்ள லாஸ்காஸ் என்னுமிடத்தில் உள்ள குகைகளில் _______ மனிதர்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

A) நியாண்டர்தால்

B) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

C) ஹோமோ எரக்டஸ்

D) குரோமேக்னான்ஸ்

6. மனிதர்களின் பரிணாம வளர்ச்சியை கீழ்க்கண்ட எவற்றின் மூலம் அறிவியல் நோக்கில் பயில முடியும்?

1. கல்வெட்டியல் 2. தொல்லியல்

3. மானுடவியல் 4. நாணயவியல்

A) 1, 2 B) 1, 4 C) 2, 3 D) 2, 4

7. மனித இனம் மாறுதல் அடைந்து, ஒரு மேம்பட்ட கட்டத்தை நோக்கி வளர்ச்சி அடைவதே________ ஆகும்.

A) இடப்பெயர்ச்சி

B) மானுடம்

C) பரிணாமம்

D) மனித வளர்ச்சி

8. கூற்று: மனிதர்கள் காலத்துக்கு ஏற்றவாறு பல மில்லியன் ஆண்டுகளாக தங்களைத் தகவமைத்துக் கொண்டு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளனர்.

காரணம்: இயற்கையில் ஏதேனும் ஒரு திடீர் மாற்றம் நிகழும்போது, உயிரினங்கள் அந்த மாற்றத்திற்கு ஏற்பத் தங்களை தகவமைத்துக் கொண்டு உயிர் பிழைக்கின்றன.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

B) கூற்று சரி, காரணம் தவறு

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.

9. தவறான இணையைத் தேர்ந்தெடு (மனிதர்களும் அவர்களது வாழ்விடங்களும்)

A) ஆஸ்ட்ரலோபிதிகஸ் - கிழக்கு ஆப்பிரிக்கா

B) ஹோமோ ஹெபிலிஸ் – தென்ஆப்பிரிக்கா

C) நியாண்டர்தால் – பிரான்ஸ்

D) ஹோமோ ஏரக்டஸ் - ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா

10. பொருத்துக.

| மனிதர்கள் | வாழ்விடங்கள் |
|---|---|
| 1. குரோ-மக்னான்ஸ் | i) சீனா |
| 2. பீகிங் மனிதன் | ii) பிரான்ஸ் |
| 3. ஹோமோ சேப்பியன்ஸ் | iii) லண்டன் |
| 4. ஹைடல்பர்க் மனிதன் | iv) ஆப்பிரிக்கா |

| | | | | |
|---|---|---|---|---|
| A) | i | iii | iv | ii |
| B) | ii | iii | i | iv |
| C) | ii | i | iii | iv |
| D) | ii | i | iv | iii |

11. ஆதிகாலத்தில் மனிதர்களின் முதன்மையான தொழில் ________.
A) விவசாயம்
B) மீன்பிடித்தல்
C) வேட்டையாடுதல்
D) கிழங்கு அகழ்தல், பழம் பறிப்பது

12. கற்கருவிகளை உருவாக்கியதற்கு அடுத்த கட்டமாக நம் முன்னோர்கள் _______ ஐ கண்டறிந்தார்கள்.
A) சக்கரம்
B) இரும்பு
C) நெருப்பு
D) தாமிரம்

13. தீப்பெட்டியைப் பயன்படுத்தாமல் நெருப்பை உருவாக்கும் பழக்கம் ________ மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் இன்றைக்கும் உள்ளது.
A) விழுப்புரம்
B) கோயம்புத்தூர்
C) நீலகிரி
D) கன்னியாகுமரி

14. _______ உருவாக்கம் மனித வரலாற்றில் ஒரு முதல்தரமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.
A) சக்கரம்
B) இரும்பு

C) நெருப்பு

D) ஆயுதங்கள்

15. மனித சமூகத்தின் முதல் கலை______.

A) ஆயுதங்கள் செய்தல்

B) பானை செய்தல்

C) விவசாயம்

D) பாறை ஓவியம்

16. தவறான இணையைத் தேர்ந்தெடு.(தமிழ்நாட்டில் உள்ள தொல் பழங்கால பாறை ஓவியங்கள்)

A) கீழ்வலை – விழுப்புரம்

B) மாவடைப்பு – கோவை

C) குமுதிபதி – மதுரை

D) பொறிவரை – நீலகிரி

17. கூற்று 1: இந்தியாவில் 750 குகைகளில் ஏறத்தாழ 500 குகைகளில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன.

கூற்று 2: ஆண்களும் பெண்களும் வேட்டையாடுவதையும் நடனமாடுவதையும் குழந்தைகள் விளையாடுவதையும் இந்த ஓவியங்கள் சித்தரிக்கின்றன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

18. கீழ்க்கண்ட எந்த கண்டுபிடிப்பால் விவசாயம் எளிதாக மாறியது ?

A) விதைகள்

B) சக்கரம்

C) நெருப்பு

D) கலப்பை

19. பரிணாமத்தின் வழிமுறை ________.

A) நேரடியானது.

B) மறைமுகமானது

C) படிப்படியானது

D) விரைவானது

20. கூற்று 1: நம் முன்னோர்கள் குழுக்களாக மரம், குகை அல்லது மலையடிவாரத்தில் தங்கினார்கள்.

கூற்று 2: ஒவ்வொரு குழுவிலும் 30 முதல் 40 பேர் இருந்தார்கள்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

21. இறுகப்பற்றுவதற்கு வசதியாகப் பெரிய கால் விரல்களையும், முன்பக்கம் நீட்டிக்கொண்டிருந்த தாடை நீட்சி சற்று குறைந்தும் காணப்பட்ட மனிதன்

A) ஹோமோ எரக்டஸ்

B) ஹோமோ ஹெபிலிஸ்

C) ஹோமோ சேப்பியன்ஸ்

D) குரோமேக்னான்ஸ்

22. மனித மற்றும் குரங்கின் பண்புகளுடன் காணப்பட்டு நடக்கக் கற்றுக் கொண்ட மனிதன்______.

A) நியாண்டர்தால்

B) குரோமேக்னான்ஸ்

C) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

D) ஹோமோ எரக்டஸ்

23. தற்கால மனிதர்களை விட சிறிய மூளை உடைய மனிதர்கள்______.

A) ஹோமோ எரக்டஸ்

B) ஹோமோ ஹெபிலிஸ்

C) ஹோமோ சேப்பியன்ஸ்

D) குரோமேக்னான்ஸ்

24. ஆப்பிரிக்கர்களிடம் இருந்து வேறுபட்டு கரடு முரடான கருவிகளை கொண்டிருந்த வேட்டையாடும் திறனில் பின்தங்கியிருந்த மனிதன்

A) ஹோமோசேப்பியன்ஸ்

B) நியாண்டர்தால்

C) குரோமேக்னான்ஸ்

D) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

25. சுயமாக சிந்திக்கும் திறனுடைய, வேட்டையாடும் மற்றும் உணவு சேகரிக்கும் சமுகமாக வாழ்ந்த மனிதன்

A) ஹோமோ எரக்டஸ்

B) ஹோமோ ஹெபிலிஸ்

C) ஹோமோ சேப்பியன்ஸ்

D) குரோமேக்னான்ஸ்

26. கற்கருவிகளுடன், எலும்பாலான கருவிகளையும், குத்தீட்டியும் நெம்புகோல் வகை கருவிகளையும் பயன்படுத்திய மனிதன்

A) ஹோமோசேப்பியன்ஸ்

B) நியாண்டர்தால்

C) குரோமேக்னான்ஸ்

D) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

27. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) ஆஸ்ட்ரலோபிதிகஸ் – 4 ல் இருந்து 2 மில்லியன் ஆண்டுகளுக்குள்

B) ஹோமோ எரக்டஸ் - 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்

C) ஹோமோ ஹெபிலிஸ் – 3.2 ல் இருந்து 2.5 மில்லியன் ஆண்டுகளுக்குள்

D) நியாண்டர்தால் – 130000 முதல் 40000 ஆண்டுகளுக்குள்

28. கிழக்கு ஆப்பிரிக்காவில் 50000 ஆண்டுகளுக்கு முன் மேற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவில் 40000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன்

A) ஹோமோசேப்பியன்ஸ்

B) நியாண்டர்தால்

C) குரோமேக்னான்ஸ்

D) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

29. ________ ஆண்டுகளுக்கு முன் நாகரிகத்தின் தோற்றம் ஏற்பட்டது.

A) 3000 B) 5000 C) 8000 D) 8500

30. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
   A) 460 கோடி ஆண்டுகளுக்கு முன் புவி தோற்றம்
   B) 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் நடந்தான்.
   C) 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன் புவி எங்கும் பரவினர்.
   D) 8000 ஆண்டுகளுக்கு முன் வேளாண்மை தொடங்கியது.


## For Answers, Check Samacheer Books

CLICK HERE

## Indus Civilisation – சிந்து வெளி நாகரிகம் Questions Pdf

CLICK HERE